நாள் 21.08.2023 O.S 387 of 2019 வா.சா.1 ராமகிருஷ்ணன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா சொத்திற்கு மேற்புறமுள்ள வீடு பிரதிவாதி சிங்கத்துரை வீடு உள்ளது என்றால் சரிதான். சிங்கத்துரை வீடு சர்வே எண் 18ல் உள்ளது என்றாலும், என் வீடு சர்வே எண் 19ல் உள்ளது என்றாலும் சரியல்ல. அது தவறாகும். நான் சர்வே எண் 18ல் உள்ள இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா அல்லது 19ல் உள்ள இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெளிவாக தெரியாது. சர்வே எண்.585/19ல் 3 செண்டு இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சிங்கத்துரை வீட்டிற்கு கீழ்பக்கம் தென்வடலாக சுவர் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த சுவருக்கு கிழக்கே என் இடமும், மேற்கு இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கே எனக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. சுவர் ஒரு அடி அகலத்தில் தெற்கே உள்ள என் வீட்டின் தெற்கற்றம் காம்பவுணட் சுவரில் இருந்து கிழமேல் தெரு வரைமேற்பபடிசுவர் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தற்போதுதான் கட்டப்பட்டுள்ளது. சுவர் 6 அடி உயரம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுவருக்கு மேற்கே கிழமேல் எத்தனை அடி இடம் எனக்கு உண்டு என்று கட்சி செய்கிறேன் என்றால் 2-1/2 செண்டுஇருப்பதாக நான் கட்சி செய்கிறேன். நான்இடத்தை அளந்து பார்க்கவில்லை. பிரதிவாதியின் வீட்டின் சுவருக்கு கீழ்பக்கம் என் வீட்டிற்கு மேல்பக்கம் தென்வடலாக உள்ள இடம் எவ்வளவு செண்டு இருக்கும் என்றால் எனது அளவுபடி எனக்கு 10செண்டு இடம் ஆகும். என் கைவசம் 7-1/2செண்டு உள்ளது. மீதி 2-1/2செண்ட் சுவரைதாண்டி உள்ளதாக நான் கட்சி செய்கிறேன். சுவருக்கு மேற்கே உள்ள இடத்தை பிரதிவாதி தற்போது அனுபவம் செய்து வருகிறார் என்றால் என்னை அனுபவம் செய்யவிடாமல் அவர் தடுத்துவிட்டார். அவரது அனுபவத்தில் தான் உள்ளது. சுவர் கட்டி எத்தனை வருடம் ஆகிறது என்றால் ஒரு வருடம் ஆகிறது. என் இடம் 2-1/2 செண்ட்டை ஆக்கிரமித்து விட்டதாகவும் அதை மீட்டு தரக்கோரி மனு

தாக்கல் செய்யவில்லை என்றாலும், கூடுதல் பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் நான் வழக்கறிஞரிடம் கூறினேன். எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை படி பிரதிவாதிஅவரது சொத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், நான் எனக்கு பாத்தியப்பட்ட உட்பிரிவில் 19ல் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும், சர்வேயர் மூலமாக அளந்து தெளிவாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு விரோதமாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் வீட்டிற்கு வடக்குபக்கம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெரு முன்பு சின்ன தெருவாக இருந்தது தற்போது அகலமாகிவிட்டது என்றால் சரியல்ல. முன்பு இருந்தது போல் தான் உள்ளது. என் இடத்தின் ஒரு பகுதி கிழமேல் தெருவிற்காக விட்டுக்கொடுக்கப்பட்டது என்றாலும், அது புலவரைபடத்தில் துலங்காது என்றாலும், நான் தவறாக கட்சி செய்கிறேன் என்றாலும் சரியல்ல. சர்வே எண் 19ல் உள்ள இடம் முழுவதும் என் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சர்வே எண்ணில் எனக்கு 2-1/2செண்ட் குறைகிறது. என் வழக்கு மதிப்பீடு தவறு என்றாலும், சொத்து விபரம் தவறு என்றாலும், என் கட்சியும்தவறு என்று சொன்னாலும் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.